# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE FAST TRACK COURT, PATTUKKOTTAI

| | | |
|---|---|---|
| Case Number | | STC .134/2023 |
| Deposition of witness | | PW1 |
| Name | | திரு. ராஜன் |
| Father's/Husband Name | | திரு. கணபதி |
| Village | | பட்டுக்கோட்டை |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Caste | | - |
| Calling | | - |
| Religion | | - |
| Age | | 65/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 27th day June 2024

**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது**

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

1. நான் SR அக்வா ஏஜென்சி பெயரில் இறால் தீவனம் மற்றும் மருந்து பொருட்கள் விற்பனை செய்யும் கம்பெனி வைத்துள்ளேன். எதிரி எங்கள் நிறுவனத்தில் கடந்த 2017 ம் வருடம் முதல் வாடிக்கையாளராக இருந்து வருகிறார். எதிரி குடும்ப விபரங்கள் எனக்கு தெரியும், எனது பக்கத்து ஊர்காரர். எதிரியின் வரவு செலவு கணக்கு குறித்த விபரங்களை தாக்கல் செய்துள்ளேன். எங்களுக்குள் வரவு செலவு 2019 முதல் 2023 வரை எந்த வரவு செலவும் இல்லை. எதிரி பணம் திரும்ப தருவதாக சொல்லி

வந்ததால் எழுத்து பூர்வமான அறிவிப்பு எதுவும் அந்த காலகட்டத்தில் எதிரிக்கு அனுப்பவில்லை. 08.06.2023 அன்று எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். 04.04.2023 அன்று எதிரி என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்து நான் ஆஜர் ஆனேன் என்றால் இல்லை. எதிரி ஏற்கெனவே வைத்திருந்த அனைத்து கடன்களையும் என்னிடம் திரும்ப கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. 2023 ம் ஆண்டு எதிரி மீது நான் முத்துப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்து எங்கள் இருவரையும் போலிசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான், ஆனால் இந்த வழக்கு சம்பந்தமாக இல்லை. எதிரி என்னிடம் தனிப்பட்ட முறையில் ரொக்கமா ரூபாய் 22 1/2 லெட்சம் கடன் வாங்கியது தொடர்பாக நான் புகார் கொடுத்து இருந்தேன். இந்த வழக்கு சம்பந்தமான தீவனம் வாங்கியது தொடர்பாகதான் நான் புகார் கொடுத்தேன் என்றாலும், அதில் போலிசார் எதிரி மீது தவறு இல்லை என்பதால் வழக்கை நிறுத்திவிட்டார்கள் என்றால் சரியல்ல.

2. ரூ.2 லெட்சத்திற்கு மேல் பணம் கொடுத்தால் அனுமதி வாங்கி தான் ரொக்கமாக கொடுக்க வேண்டும் என்பது எனக்கு தெரியும். எதிரியின் அண்ணன் அன்பழகனை எனக்கு தெரியும். எனது உறவினர். எதிரி உத்தரவாதத்திற்கு கொடுத்த காசோலையை வைத்து எதிரியை பழி வாங்க வேண்டும் என்ற நோக்கில் இந்த வழக்கை பொய்யாக நானே காசோலையை பூர்த்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியிடம் மூன்று காசோலைகள் 12.06.2023 அன்று நான் வாங்கியுள்ளேன். எதிரி 2017 முதல் 2019 வரையான காலகட்டத்தில் தான் தனது மூன்று காசோலைகளை கொடுத்தார் என்றும், அந்த காசோலையை வைத்துதான் தற்போது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி கொடுத்த காசோலை சம்பந்தமாக 04.05.2023 அன்று பெருகவாழந்தான் காவல் நிலையத்தில் என் மீது எதிரி புகார்

கொடுத்தார் என்றால் சரியல்ல. எனது நிறுவனத்திற்கு வருமான வரி செலுத்தி வருகிறேன். எல்லாருடைய கணக்கு வழக்குகளையும் எனது நிருவனத்தில் நான் தான் பராமரித்து வருகிறேன். எதிரிக்கு கொடுத்த வரவு செலவு குறித்து வருமான வரி விபரத்தில் சொல்லியுள்ளேன். காசோலைகளை தவிர வேறு ஆவணம் எதுவும் வாங்கவில்லை. எதிரிக்கும் அவரது அண்ணன் அன்பழகனுக்கும் சொத்து தகராறு இருந்து வருகிறது என்றாலும் நான் அவரது அண்ணனுடன் சேர்ந்துக்கொண்டு எதிரியை பழி வாங்க வேண்டும் என்பதற்காக இந்த தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரி மீது 2023 ம் வருடம் முத்துப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். எதிரி எங்களது அலுவலகத்தில் வந்து என் முன்னிலையில் காசோலைகளை பூர்த்தி செய்து கையொப்பம் இட்டு என்னிடம் கொடுத்தார்.

(எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

Signature of witness

*Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.*

Judicial Magistrate,
Fast Track Court (Magisterial Level)
Pattukkottai.